## திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திரு.பெ.இரவிச்சந்திரன், எம்.எஸ்ஸி.,எம்.ஏ.,எம்.எட்.,

---

திருவள்ளுவராண்டு– 2055 குரோதி வருடம் ஐப்பசி திங்கள் ஆம் நாள்.

ந.க.எண்.3189/அ1/2023 நாள்:25.10.2024

பொருள் : பள்ளிக்கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் நியமனம் –திருவள்ளூர் மாவட்டம் – காலஞ்சென்ற பட்டதாரி ஆசிரியர் திரு.M.பழனி என்பாரின் வாரிசுதாரரான மகன் திரு.P.வினோத்குமார் என்பவருக்கு அரசின் அறிவுரையின்படி 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணை வழங்குதல் – சார்ந்து.

பார்வை :

(1) அரசாணை(நிலை) எண்.101/பள்ளிக்கல்வித் துறை நாள்.18.05.2018

(2) அரசாணை (நிலை) எண்.48/தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.26.02.2021

(3) திருவள்ளூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.9300/அ1/2022 நாள். 13.10.2022

(4) அரசாணை எண்.151, ப.க.SE1(1), துறை, நாள்.09.09.2022

(5) திருவள்ளூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.3189/அ1/2023 நாள்.15.06.2023

(6) அரசு கடித (efile) எண்.4419/தொ.க 1(1) / 2024–1 நாள்.17.05.2024

(7) தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், ந.க.எண். 26062/ஜே/இ2/2023 நாள்.22.05.2024

(8) தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.32996/ஜே/இ4/2023 நாள்.13.08.2024.

-----

ஆணை:–

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர், சத்தியமூர்த்தி தெரு, க.மு.ந.சகோ, நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்த போது 18.10.2015ல் காலமான திரு.M.பழனி என்பாரின் வாரிசுதாரரான மகன் திரு.P.வினோத்குமார் என்பவருக்கு பார்வை 3ல் கண்டவாறு கருணை அடிப்படையில் திருவள்ளூர் மாவட்டம், போந்தவாக்கம், அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 6ல் காணும் அரசு கடிதத்தின்படி, இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சராக கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களுக்கு நியமன அலுவலர் நிலையில் கருத்துருவினை பரிசீலித்து பணிவரன்முறை செய்திட பார்வை 7ல் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகளில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பார்வை 8ன்படி பெறப்பட்ட தனியரின் பணியினை வரன்முறை செய்வதற்கான கருத்துரு உரிய அசல் ஆவணங்களுடன் ஆய்வு செய்யப்பட்டது. அக்கருத்துருவில் தனியர் சார்பாக விலக்கு / தளர்வாணை ஏதும் தேவைப்படாத நிலையில் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பதவிக்குரிய நியமன அலுவலரான முதன்மைக்கல்வி அலுவலர் பணிவரன்முறை செய்ய தெரிவித்துள்ளதன் அடிப்படையில் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு இளநிலை உதவியாளர் பதவியில் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / பதவி / பணிபுரியும் பள்ளி / அலுவலகம் (திரு/ திருமதி) | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| 01 | திரு.P.வினோத்குமார்<br>இளநிலை உதவியாளர்<br>அரசு மேல்நிலைப்பள்ளி,<br>போந்தவாக்கம்,<br>திருவள்ளூர் மாவட்டம் | 14.10.2022<br>முற்பகல் | 14.10.2022<br>முற்பகல் |

மேலும் தனியர் தொடர் மூன்றாண்டு பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும். தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும். தகுதிகாண் பருவம் முடிக்கபட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் பணியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்து தனியரின் அசல் ஆவணங்கள் மற்றும் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

.இணைப்பு: பணிப்பதிவேடு (ம) அசல் சான்றுகள்

முதன்மைக் கல்வி அலுவலர்
திருவள்ளூர் – 602 001

பெறுநர் – சம்பந்தப்பட்ட பணியாளர் (சார்ந்த தலைமையாசிரியர் வழியாக )

நகல் –
1. தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, போந்தவாக்கம், திருவள்ளூர் மாவட்டம்.
2. மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை) திருவள்ளூர்
3. சென்னை–06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4.கோப்பிற்கு